1708


உ

சாஸ்திரக் கொடியோனாகிய

சகாதேவ ரருளிசெய்த

# கெவுளி சாஸ்திரம்.

பல்லி விழும் பலன்,
பல்லி சொல்லும் பலன்,





ஆந்தை சிரிக்கும்பலன்
இதனுடன் அடங்கியது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 DEC 1924
MADRAS

## டி. கோபால் நாயகரது

சென்னை, கோள்டன் எலெக்ட்ரிக் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] **1924.** [அணா 2.


A:864
N24

உ

கணபதிதுணை.

சகாதேவர் அருளிச்செய்த

# கெவுளி சாஸ்திரம்.



| | |
|---|---|
| கெவுளிசொல்லும் திக்குகள். | சயனிக்கும்போது சொல்லும்பலன். |

### விநாயகர் துதி வெண்பா.

படியதனை நாற்சதுரம் பகுத்துயெட்டு திக்காக்கி
வடிவம் பதினாறு கோணம் - முடிவுவிண்மன்
ஆகபதி னெட்டுக்கு மறையுங் கெவுளிக்குபலன்
பாகவரும் ஐங்கரனைப் பாடு.

### நான்முகம்.

அகிலமுளமானிடர்கள் பிழைக்கவேண்டி
ஐவர்பஞ்சபாண்டவரி லிளையதம்பி
மகிமைபெருஞ்சகலகலை தெரிந்தஞானி
மாயனருள்பூண்டசகா தேவர்முன்னாள்
தகமையுடன்ஓதிவைத்த கெவுளிகாதல்
தம்பியடாமர்மமா யிருந்ததாலே
ஜெகமுழுதுங்கண்ணாடி போல்காண
செஞ்சியேகாம்பரமும் வெளியிட்டானே. 1

வெளியிட்டயின்னாலோ வீண்போகாது
வீணருக்குயேதுரைத்துப் புலப்படாது
தெளிவறிந்தபெரியோரை சொல்லக்கேளீர்
தீரமாய்க்கற்றாலும் அடக்கம்வேண்டும்
உளவறிந்தவித்தையதா யிருந்தபோதும்
ஒருமுதியோர்சொல்விபரம் கேட்கவேண்டும்

வளபானயின் னாலே சிரேஷ்டமென்றே
வாழ்மாலின்சாட்சியதாய் நம்பவேண்டும். 2

நம்பினோற்குசகலமும் பலிக்குமப்பா
நம்பாதமடையருக்கு நாமென்செய்வோம்
வம்பென்றுவாயாடித் திரியவேண்டாம்
ஐம்பூதசாட்சியதாய் நம்பிப்பாரும்
தம்பியடாசித்தரெல்லா மடுத்த நூலை
தானென்றுகெருவமதாய்ப் பழித்தபேர்கள்
அம்புவியிலொருபோது சுகப்படார்கள்
அழிநரகென்றேமுன்னே ரறைந்திட்டாரே. 3

அறைந்திட்டமொழியதனை நம்பிகேளு
அப்பனேகெவுளியது சொல்லும்போது
வருந்தியேசிந்தைமிக வாடுவார்கள்
வரத்தென்றும்போக்கென்றுந் தெளிந்திடாமல்
பிரிந்திட்டதிசைதிசைக்கும் புகலும்வாக்கு
புண்ணியனேகீழ்மேலுஞ் சொல்லும்வாக்கும்
கருத்துடனேகண்டுமனம் தெளிவதற்கு
காண்டபன் தம்பிசொன்ன சூக்ஷங்கேளே. 4

கீழென்றால்பாதாள மல்லகண்டாய்
கண்மணியேமேலென்றால் வானமல்ல
தாமென்றால்பூமிமீதில் சொல்லுஞ்சேதி
தலைக்குமேல்சொல்லுவது மேலேயாகும்
சூழென்றமற்றையிடந் திசையிற்கூட்டும்
சத்தமாய்க்காதலுட சேதிசொல்லு
வாழென்றவாரமது யேழுநாட்கும்
வழுத்தியகாதல்விபர மறிந்துசொல்லே. 5

## ஞாயிற்றுக்கிழமையின் பலன்.

ஆதியாம்நாயர் தனி லறையுமோர்கெவுளிஜாதி
வேதியராகுவாரே வெள்ளையாம்நிறத்தினாலே
சோதியாமனையாளோடு போஜனமுண்டுகூடி
மேதினிதனிற்கிழக்கு முகமதுநிற்பார்பாரே.

இ-ள். ஞாயிற்றுக்கிழமை சொல்லுவது பிராமணஜாதி கெவுளி வெள்ளைநிறம் அதுதன்னுடைய ஸ்திரீயுடன் கூடிக்கொண்டு ஆகாரம்புசித்து கிழக்குமுகமாக யிருப்பார்கள் எ-று.

பாரப்பாகிழக்கேசொன்னால் ராகுவால்பயந்தானப்பா
கூறப்பாயடுத்ததீவிற் குற்றமாம்கேடுவார்த்தை

நேரப்பாவக்கினிமூலை கேதுவால்சாவல்சொல்லும்
தூரப்பாவதற்குநேரே தீவுசொற்கலகமாகும்.

இ-ள். கிழக்கே சொல்லுமாகில் இராகுயிருப்பான் அந்தசேதி பயம் அடுத்ததீவிற் சொன்னால் கேடுவார்த்தை அக்கினிமூலையிற் சொன்னால் கலகம்வரும்-எ-று.

ஞாயர் தெற்குச்சொல்லும் பலன்.

தெற்கினிற்சொல்லும்போது அங்காரனால்சுகமதாகும்
நிற்கவேதீவிற்சொன்னால் நடப்பது அபசயந்தான்
பற்றியேநிருதிமூலை புதன்தன்னால்வருத்துபந்து
குற்றமேயில்லைதீவிற் சொல்வதுவருத்துஅன்னம்.

இ-ள். தெற்கே சொல்லும்போது அங்காரகனிருப்பான் சுகமான வார்த்தையாகும் தீவுதிசையில் சொல்லுமாகில் அபசெயமாகும் நிருதிமூலையிற்சொன்னால் புதன் இருப்பான் அந்தசொல் பந்துஜனம்வருத்து தீவிற்சொன்னால் போஜனவருத்து-எ-று. 3

ஞாயர் மேற்குசொல்லும் பலன்.

சனியதுயிருப்பான்மேற்கே சஞ்சலம்சொல்லும்வார்த்தை
வினையடாதீவிற்சொன்னால் வருவதுகேடுவார்த்தை
இனியெனவாய்வுமூலை யிந்திரனாய்விருந்துமுண்டு
சனியெனதீவிற்சொன்னால் கட்டுவாய்கோடிவஸ்திரம்.

இ-ள். மேற்கே சொல்லுமாகிற் சனியிருப்பான் சஞ்சலமான வார்த்தை தீவுதிசையிற்கேடுவார்த்தை வாய்வுமூலையிற் சொன்னால் இந்திரனிருப்பான் விருந்துவரும் தீவுதிசையிற்சொன்னால் கோடி வஸ்திரம் கட்டுவாய்-எ-று. 4

181068

ஞாயர் வடக்குசொல்லும் பலன்.

சொல்வதுவடக்கேயானால் சுகமெனும்பிரகஸ்பதியால்
வெல்லவேதீவிற்சொன்னால் வாசனையணிவர்மெய்யில்
வெல்லவேசனியின்மூலை வரும்சுக்கிரனாற்பொருளும்
தொலையுமில்லைதீவில் தூரத்தோர்வருகுவாரே.

இ-ள். வடக்கு சொல்லுமாகில் பிரகஸ்பதியிருப்பான் சுகமான வார்த்தை தீவுதிசையிற்சொன்னால் பரிமளம் சனிமூலையிற் சொல்லுமாகில் சுக்கிரனிருப்பான் நல்லவார்த்தை தீவுதிசையிற் சொன்னால் தொலைவிலிருந்து உறவின்முறையார் வருவார்கள்-எ-று.

ஞாயர் ஆகாயமும் பூமியிலும் சொல்லும்பலன்.

உயரமேசொல்லுமாகில் சூர்யனாலுதவியுண்டு
துயரமேயில்லைபூமி சந்திரனால்வின்னமாகும்

நயம்பெறஞாயருக்கு நாட்டியபடியேபாரும்
தயவுள்ளதிங்களுக்கு தானதுசொல்லிவாறேன்.

இ-ள். தலைக்குமேற்சொல்லுமாகில் சூரியனிருப்பான் நினைத்த காரியம் வின்னமாகும் பூமியிற்சொல்லுமாகிற் சந்திரனிருப்பான் காரியம் கைகூடும் ஞாயர் உரைத்தேன் திங்கட்கிழமை சொல்லு கிறேன்.

## திங்கட்கிழமை சொல்லும் கெவுளிஜாதி.

சங்கரனருளினாலே சாற்றுவேன்கெவுளிஜாதி
பொங்கவோசனுகும் பொருந்தியரோஜாவர்ணம்
தங்கியேமுதுகிற்பத்து தழும்புபோற்கீறலுண்டு
இங்கிதஸ்திரீயுந்தானும் இருப்பாரேபொசிப்புகொண்டு.

இ-ள். திங்கட்கிழமை பேசுகின்ற கெவுளிஜாதி இராசநிறம் ரோசாப்பு வர்னம் அதின்முதுகில் பத்துகீறல் உண்டு அதுதன்னுடைய ஸ்திரீயுடன் ஆகாரங்கொண்டுயிருக்கும்-எ-று. 7

## திங்கள் கிழக்குசொல்லும் பலன்.

கிழக்கினில்பிரகஸ்பதி கீர்த்திசொல்பொருளுஞ்சேரும்
தழைக்கவேதீவிற்சொன்னுல் தனதுயிஷ்டர்கள்வருத்து
பழகிபார் அக்கினிமூலை சனியனுர்கலகஞ்சொல்லும்
வழுத்தியதீவிற்சொன்னுல் வருந்துன்பமெத்தவென்ருர்.

இ-ள். கிழக்கே சொல்லுமாகில் பிரகஸ்பதியிருப்பான் பொருள் சேரும் தீவுதிசையிற்சொன்னுல் பிரியமானவர் வருவார்கள் அக்கினி மூலையிற்சொல்லுமாகில் கலகம்வரும் தீவுதிசையிற்சொன்னுல் ரொம்ப வருத்தமாம்-எ-று.

## திங்கள் தெற்குசொல்லும் பலன்.

சொல்வதுதெற்கோகார் பகைவர்கள்வருக்கமாகும்
புல்லெனதீவிற்சொன்னுர் புகலுரீகேடேயென்றும்
கொல்லெனகருதிசொன்னுற் கதிரோனும்சாவுவார்த்தை
மெல்லெனதீவிற்சொன்னுல் மகாகொடுங்கலகமென்ருர்.

இ-ள். திங்கட்கிழமை தெற்கே சொல்லுமாகில் ராகுவிருப்பான் பகைவர் வருவார் தீவுதிசையிற் சொன்னுற் கேடுவார்த்தை நிருதி மூலையிற்சொன்னுல் சூரியனிருப்பான் சாவுவார்த்தை தீவுதிசையிற் சொன்னுல் கலகம்-எ-று. 9

## திங்கள் மேற்குசொல்லும் பலன்.

மேற்கேசந்திரனிருப்பான் மொழிவது அரசர்நன்மை
தீர்க்கமேதீவிற்சொன்னுற் சேர்ந்தபந்துக்கள்வருத்தாம்

பார்க்கவேவாய்வுமூலே கேதுவாற்சாவுவார்த்தை
பார்க்கவேதீவிற்சொன்னுற் பகைவர்கள்வருகுவாரே.

இ-ள். திங்கட்கிழமை மேற்கே சொல்லுமாகில் சந்திரனிருப்பான் அரசரால் நன்மையான சேதி தீவுதிசையிற் சொன்னுற் பந்துக்கள் வருவார் வாய்வு மூலேயிற் கேதுயிருப்பான் சாவுவார்த்தைவரும் தீவு திசையிற்சொன்னுற் பகைவர்கள் வருவார்கள். எ-று. 10

திங்கள் வடக்குசொல்லும் பலன்.

வடக்குசொற்புதனிருப்பான் வருவதுஅர்த்தலாபம்
துடறெனதீவிற்சொன்னுல் துலவதுபிரயாணம்போவார்
நடுக்கசொல்ஈசான்யத்தில் நல்லசோபனங்களென்றே
அடுக்கவேதீவிற்சொன்னுல் ஐயையோகலகமென்ருர்.

இ-ள். திங்கட்கிழமை வடக்கேசொல்லும்போது புதனிருப்பான் அர்த்தலாபம் தீவுதிசையிற்சொன்னுற் பிரயாணங்கூட்டும் ஈசானி யத்திற் சொல்லும்போது சுக்கிரனிருப்பான் சோபனம் தீவுதிசை யிற் கலகவார்த்தை எ-று. 11

திங்கள் ஆகாயத்திலும் பூமியிலும் சொல்லும்பலன்.

ஆங்காரகனிருப்பான் ஆகாயம்சொல்லும்போது
பக்கமேதுக்கவார்த்தை பதிவிட்டுஓடச்செய்யும்
தங்கமேபூமியிற்சொன்னுல் இந்திரஐஸ்வரியமுண்டு
யிங்கிததிங்கள்சொன்னேன் இயம்புவேன்செவ்வாய்சேதி.

இ-ள். திங்கட்கிழமை தலைக்குமேற் சொல்லுமாகில் அங்காரக னிருப்பான் பதிவிட்டு ஓடச்செய்யும் பூமியிற்சொல்லுமாகில் இந்திர னிருப்பான் ஐஸ்வரியம். எ-று. 12

செவ்வாய்க்கிழமை சொல்லும் கெவுளி ஜாதி.

நண்ணியராஜவம்சம் நிலத்தினில்சாம்பல்வர்னம்
எண்ணியேயெட்டுகீரல் முதுகினிலிருக்கும்பாரு
வண்மையாய்ஸ்திரீயும்தானு வளமதாய்போசனங்களுண்டு
புண்ணியர்போலேதக்ஷணம் பொருந்தியமுகமிருப்பார்

இ-ள். செவ்வாய்க்கிழமை சொல்லும் கெவுளியினுடைய ஜாதி ராஜவமிசம் நிறத்தில் சாம்பல்வர்னம் முதுகில் எட்டு கீறலிருக்கும் தன் ஸ்திரீயுடன் கூடிப்போசனமுண்டு தக்ஷணமுகமாக விருப்பார் கள் அதுசொல்லும் பலன் யாதெனில். எ-று 13

செவ்வாய் கிழக்குசொல்லும் பலன்.

சந்திரன்கிழக்கிருப்பான் சாற்றும்சொற்சம்பத்துண்டு
வந்திடும்தீவிற்சொன்னுல் வளம்பெறநல்லவார்த்தை

தொந்தமேயக்கினிமூலே சுக்கிரனுலுறவுண்டாகும்
நிந்தையுமில்லேதீவில் நெடுந்துலகோர்வருத்து.

இ-ள். செவ்வாய்க்கிழமை கிழக்கு சொல்லுமாகில் சந்திரனிருப்பான் நல்லவார்த்தை தீவுதிசையிற்சொன்னுல் சேதிவரும் அக்கினி மூலேயிற்சொன்னுல் சுக்கிரனிருப்பான் உறவுண்டாகும் தீவுதிசையிற் சொன்னுல் துலவிலிருந்து வருவார்கள் - எ-று. 14

செவ்வாய் தெற்குசொல்லும்பலன்.

தெற்கினில்கேதிருப்பான் சொல்வதுமரணவார்த்தை
நிற்கவேதீவிற்சொன்னுல் வியாதிக்குப்பயந்தானப்பா
வற்கமாய்நிருதிமூலே ராகுவாற்பயமுண்டாகும்
தாக்கமேதீவிற்சொன்னுல் அரசால்கெடுதியாமே.

இ-ள். செவ்வாய்க்கிழமை தெற்குசொல்லுமாகிற் கேது விருப்பான் சாவுவார்த்தை தீவுதிசையிற்சொல்லுமாகில் வியாதியோருக்கு பயம் நிருதி மூலேயிற்சொன்னுல் ராகுயிருப்பான் பகைவரும் தீவுதிசையிற்சொன்னுல் ராஜபயமாகும். எ-று. 15

செவ்வாய் மேற்குசொல்லும் பலன்.

சூரியனிருப்பான்மேற்கே சொல்வதுகைதான்கூடும்
சூரியதீவிற்சொன்னுல் குருவதுதானியநஷ்டம்
வீரியவாய்வுமூலே புதன்தன்னுற்ஜெனவருத்து
நேரதுதீவிற்சொன்னுல் நடப்பதுசுபந்தானென்ருர்.

இ-ள். செவ்வாய்க்கிழமை மேற்கே சொல்லுமாகிற் சூரியனிருப்பான் நினேத்தகாரியம் கைகூடும் தீவுதிசையிற்சொல்லுமாகில் தானியநஷ்டம் வாய்வு மூலேயிற்சொன்னுல் புதனிருப்பான் வருத்து தீவுதிசையிற் சொன்னுல் சுபம். எ-று. 16

செவ்வாய் வடக்குசொல்லும் பலன்.

அறைவதுவடக்கேயானுல் அங்காரனுலக்கினிபயம்
பிறந்திடும்தீவிற்சொன்னுல் பொல்லாதகலகவார்த்தை
தெரிந்திடும்ஈசானியத்தில் இந்திரவாகனமுண்டு
நிறைந்திடும்தீவிற்சொன்னுல் ராசஸ்திரீவருத்துமாமே.

இ-ள். செவ்வாய்க்கிழமை வடக்கே சொல்லுமாகில் அங்காரகனிருப்பான் அக்கினிபயம் தீவுதிசையிற்சொன்னுல் கலகம் ஈசானிய

மூலையிற்சொன்னல் இந்திரனிருப்பான் வாகனம்வரும் தீவுதிசையிற் சொல்லுமாகில் ராசஸ்திரீ வருத்து. எ-று. 17

செவ்வாய் ஆகாயம் பூமியில் சொல்லும்பலன்.

ஆகாயம்சனியிருப்பான் அந்தசொற்பிரயாணங்கூட்டும்
யோகமேபூமியிற்சொன்னல் இருப்பரேபிர்கஸ்பதிதானும்
பாகமேஸ்திரீயின்லாபம் பகர்வதுநல்லவார்த்தை
ஆகமம்விளங்கச்சொன்ன ஐவரின்நூலிதாமே.

இ-ள். தலைக்குமேற் சொல்லுமாகிற் சனியிருப்பான் தூரப்பிரயாணங் கூட்டும் பூமியிற்சொல்லுமாகிற் பிரகஸ்பதியிருப்பான் ஸ்திரீ லாபம் நல்லவார்த்தை வரும். எ-று. 18

புதன்கிழமைசொல்லும் கெவுளி ஜாதி.

இராஜசூஸ்திரஜாதி திறமெனும்வர்னம்பொன்னும்
வறமெனுமுதுகிலாரு கீறலுமிருக்கும்பாரும்
பெருமையாய்ஸ்திரீயுந்தானும் பொசித்திடவாலோசித்து
ஒருமுகமாய்நடக்கில் ஓங்கியேவாழ்குவாரே.

இ-ள். புதன்கிழமைசொல்லும் கெவுளிஜாதி இராஜசூஸ்திர ஜாதி பொன்னிறம் முதுகில் ஆறு கீரலிருக்கும் அது தன்மனையாளோடு கூடி ஆகாரம்பொசித்து ஒருமுகமாக வடக்கேயிருப்பார்கள். எ-று.

புதன் கிழக்குசொல்லும் பலன்.

இந்திரன்கிழக்கிருப்பான் இயம்புஞ்சொல்லைஸ்வரியம்
வந்திடும்தீவிற்சொன்னல் வருகுமேகாய்கனிகள்
தொந்தமாமக்கினிமூலை வியாழனல்கனம்வருத்து
நிந்தையாந்தீவிற்சொன்னல் ஸ்ரீயவள்கோபமாவாள்.

இ-ள். புதன்கிழமை தெற்கே சொல்லுமாகில் இந்திரனிருப்பான் ஐஸ்வரியம்வரும் தீவுதிசையிற் சொன்னல் காய்கனிகள்வரும் அக்கினிமூலையிற் சொல்லுமாகில் வியாழபகவான் இருப்பான் தனதானியம்வருத்து தீவுதிசையிற்சொன்னல் மனைவிகோபமாவாள். எ-று. 20

புதன் மேற்கு சொல்லும் பலன்.

சந்திரனிருப்பான்தெற்கே சம்பத்துவுண்டுசொன்னல்
அந்ததோதீவிற்சொன்ன லரசரும்பெரியோர்நன்மை
பந்தமேநிருத்திமூலை ராகுவாலுறவோர்துக்கம்
சந்தேகம்தீவிற்சொன்னற் சோரத்தின்பயந்தானென்ருர்.

இ-ள். புதன்கிழமை தெற்கே சொல்லுமாகிற் சந்திரனிருப்பான் சம்பத்துவருந் தீவுதிசையிற் சொன்னால் ராசாவாலும் பிரபுவாலும் உதவியாகும் நிருதிமூலையிற் சொன்னால் இராகுவிருப்பான் உறவின் முறையார் துக்கந் தீவுதிசையிற் சொன்னால் சோரம். எ-று. 21

புதன்மேற்கு சொல்லும் பலன்.

மேற்கினிற்கேதிருப்பான் மொழிவதுபயந்தானப்பா
மார்க்கமாம்தீவிற்சொன்னால் மானம்போமராசாலே
ஆற்கவேவாய்வுமூலை அங்காரனாலர்த்தநாசம்
பார்க்கவேதீவிற்சொன்னால் பயமதுவக்கினியாலே.

இ-ள். புதன்கிழமை மேற்கேசொல்லுமாகில் கேதிருப்பான் பயமானவார்த்தை தீவுதிசையிற் சொன்னால் ராசகொடூரவார்த்தை வாய்வுமூலையிற்சொன்னால் அங்காரகனிருப்பான் அர்த்தநாசனம் தீவுதிசையில் அக்கினிபயம். எ-று. 22

புதன்வடக்கேசொல்லும் பலன்.

சுக்கிரன்வடக்கிருப்பான் சொல்வதுசுகமேயாகும்
மிக்கவேதீவிற்சொன்னால் மெய்யினிலிரத்தங்காணும்
சிக்கவேஈசானியத்திற் சூரியனாற்றிண்ணமாகும்
பக்கமேதீவிற்சொன்னால் பந்துக்கள்வருத்துமாகும்.

இ-ள். புதன்கிழமை வடக்கே சொல்லுமாகிற் சுக்கிரனிருப்பான் சுபவார்த்தை தீவுதிசையிற் சொன்னால் பந்துக்கள் வருவார்கள். எ-று. 23

புதன் ஆகாயமும் பூமியிலும் சொல்லும் பலன்.

உயரமேசனியிருப்பான் உதவாதுசாவுவார்த்தை
தயவுள்ளபுதனிருப்பான் தாழவேகண்டுகொள்ளும்
நயமுள அந்தசொல்லால் நாடுவார்விருந்துதானும்
சயனமேதப்பாதென்று சாற்றினார்பெரியோர்வாக்கே.

இ-ள். ஆகாயத்திற் சொல்லுமாகில் சனியிருப்பான் சாவுவார்த்தை பூமியிற்சொல்லுமாகிற் புதனிருப்பான் போசனத்தார் வருவார்கள். எ-று. 24

வியாழக்கிழமைசொல்லும் கெவுளி ஜாதி.

வேற்றுமைசாதிவேந்தன் விண்டிடுநீலவர்ணம்
காற்றிடஸ்திரீயுந்தானும் கனக்கபோசனங்களுண்ண
போற்றியேவடக்குபக்கம் பொருந்தியேயிருப்பானென்று
சாற்றியபெரியோர்வார்த்தை சரியேநேம்பிப்பாரே.

இ-ள். வியாழக்கிழமை பேசும்கெவுளிஜாதி வேறுஜாதி அரசன் நிறத்தில் நீலவர்னம் அது தன்னுட ஸ்ரீயுடன்கூடிவடக்குமுகமாயிருந்து ஆகாரங்கொள்வார்கள்-எ-று. 25

வியாழக்கிழமை கிழக்குசொல்லும்பலன்.

கிழக்கினில்ராகிருப்பான் கெடுதியாம்சாவுவார்த்தை
வழக்கமேதீவிற்சொன்னால் வடிவுள்ளஸ்திரீயின்சோரம்
தழைக்கவேஅக்கினிமூலே புதன்தன்னால்வருவார்பந்தி
செழிக்கவேதீவிற்சொன்னால் சந்தோஷவார்த்தையென்றார்.

இ-ள். வியாழக்கிழமை கிழக்கேசொல்லுமாகில் ராகுயிருப்பான் சாவுவார்த்தை தீவுதிசையிற்சொன்னால் சோரபயம் அக்கினி மூலேயிற்சொன்னால் புதனிருப்பான் உறவின்முறையார் வருவார்கள் தீவுதிசையிற் சந்தோஷவார்த்தைவரும்-எ-று. 26

வியாழம் தெற்கு சொல்லும்பலன்.

அரைவதுதெற்கேயானால் வியாழனாலர்த்தலாபம்
பிரியவேதீவிற்சொன்னால் பேசிடுரோகநாசம்
நிருதியிற்சொல்லுமாகிற் சந்திரனாற்பாக்கியமுண்டு
தெரிந்திடுந்தீவிற்சொன்னால் சந்தோஷபிரயாணமென்றார்.

181068

இ-ள். வியாழக்கிழமைதெற்கே சொன்னால் வியாழனிருப்பான் அர்த்தலாபம் தீவுதிசையிற்சொன்னால்ரோகம் நிருதிமூலேயில் சொல்லுமாகிற் சந்திரனிருப்பான் பாக்கியமுண்டு தீவுதிசையிற் சந்தோஷவார்த்தை. எ-று. 27

வியாழன் மேற்குசொல்லும் பலன்.

அப்பனேமேற்குசொன்னால் அங்காரகனால்சண்டையாகும்
தப்பியேதீவிற்சொன்னால் சாவுடன் அக்கினிபயம்
செப்பவேவாயுமூலே சந்திரனாலபஜெயங்கள்
ஒப்பியேதீவிற்சொன்னால் ஒங்கும்சோபனங்கள்வார்த்தை.

இ-ள். வியாழக்கிழமை மேற்கேசொல்லுமாகில் அங்காரகனிருப்பான் சண்டையாகும் தீவுதிசையிற்சொன்னால்சோபனவார்த்தை.

வியாழம் வடக்குசொல்லும்பலன்.

உள்ளதுவடக்கேசூரியன் வினையினால்காரியமாகா
வள்ளமேதீவிற்சொன்னால் கடுந்துயர்கேடுவார்த்தை
தெள்ளியேயீசானியத்திற் சுக்கிரனால்போசனங்கள்நன்மை
வள்ளல்போற்தீவிற்சொன்னால் வருவெகுமானம்பாரே.

இ-ள். வியாழக்கிழமை வடக்குசொல்லுமாகிற் சூரியனிருப்பான் காரியமாகாது தீவுதிசையிற்சொன்னால் கெடுதி ஈனியீசானியத்திற் சொன்னால் சுக்கிரனிருப்பான் நல்லபோசனங்கள் வரும்தீவுதிசையிற் சொன்னால் நல்லவெகுமானங்கள்வரும். எ-று. 29

### வியாழம் ஆகாயத்திலும். பூமியிலுஞ் சொல்லும்பலன்.

ஆகாயம்கலியிருப்பான் அனர்த்தமும்சோரமாகும்
பாகமேபூமியிற்சொன்னால் ரோகமாம்கேதுவாலே
தாகமேதீரவென்று தருமருக்குத்தம்பிசொன்னார்
வாகவேவியாழஞ்சொன்னேன் வழுத்துவேன்வெள்ளிகேளே.

இ-ள். ஆகாயமென்பது தலைக்கு மேற்சொல்லுமாகில் சனியிருப்பான் சோரம்வரும் பூமி மீதிற்சொன்னால் வியாதிகாணும் இப்படியாகதருமருக்குதம்பியாகிய சகாதேவர்சொன்னார். எ-று. 30

### வெள்ளிக்கிழமைசொல்லும் கெவுளிஜாதி.

வெள்ளியின்கெவுளிஜாதி விளம்புவேன்கேளுமென்ற
விள்ளுவேன்க்ஷத்திரியராஜா வர்னமேசெகப்பதாகும்
புள்ளிபோல்முதுகிலாறு தேமலுமிருக்கும்பாரு
உள்ளமும்மகிழஸ்திரீயோ டுண்டுமேயிருப்பாரென்றார்.

இ-ள். வெள்ளிக்கிழமைசொல்லுங் கெவுளி ஜாதிக்ஷத்திரிய ராஜா செகப்பு நிறமும் முதுகிலாறு தேமலிருக்கும் ஸ்திரீயுடன் ஆகாரங் கொண்டிருக்கும். எ-று. 31

### வெள்ளி கிழக்குசொல்லும் பலன்.

புகல்வதுகிழக்கேயிந்திரன் புதுசுபவர்த்தைகாணும்
வகையுடன்தீவிற்சொன்னால் வருகந்தம்பூஷணங்கள்
பகையெனஅக்கினிமூலை கேதுவால்உறவோர்க்குபயம்
ஜெகமெனுந்தீவிற்சொன்னால் சேரவேதானமுண்டாம்.

இ-ள். கிழக்குசொல்லுமாகில் இந்திரனிருப்பான் புதிய சுபவார்த்தைவரும் தீவுதிசையிற்சொன்னால் கந்தபரிமள பூஷணம்வரும் அக்கினி மூலையிற்சொன்னால் கேதுயிருப்பான் உறவின்முறை யாருக்கு பயம் தீவுதிசையிற்சொன்னால் தனம் வருத்துவரும். எ-று. 32

### வெள்ளி தெற்கேசொல்லும் பலன்.

பக்குவம்புதனால்தெற்கே பந்துக்கள்வருத்துமாகும்
மிக்கவேதீவிற்சொன்னால் புடவைபூஷணங்களுண்டாம்
சிக்கெனநிருதிமூலை வியாழனால்வெகுமானமுண்டு
தக்கவேதீவிற்சொன்னால் தன்பகைவெல்லலாமே.

இ-ள். வெள்ளிக்கிழமை தெற்கேசொல்லுமாகில் புதனிருப்பான் பந்துக்கள் வருவார்கள் தீவுதிசையிற்சொன்னால் புடவை பூஷணம் வரும் நிருதி மூலையிற் சொல்லுமாகில் வியாழனிருப்பான் வெகுமானம்வரும் தீவுதிசையிற்சொன்னால் பகையாளரைவெல்லலாம். எ-று.

வெள்ளி மேற்குசொல்லும் பலன்.

தன்மைதான்மேற்கேசொன்னால் சந்திரனார்புகழுண்டாம்
புன்மையேதீவிற்சொன்னால் பந்துடன்யிஷ்டர்சேர்வார்
வின்னமேவாய்வுமூலை ராகுவால்வீட்டில்சண்டை
பின்னிடதீவிற்சொன்னால் பிரயாணமும்வருகுமென்றார்.

இ-ள். வெள்ளிக்கிழமை மேற்கேசொல்லுமாகில் சந்திரனிருப்பான் சந்தோஷவார்த்தையாகும் தீவுதிசையிற்சொன்னால் பந்துக்களும் சினேகிதரும் வருவார்கள் வாய்வு மூலையிற்சொன்னால் ராகுயிருப்பான் வீட்டில்சண்டைவரும் தீவுதிசையிற்சொன்னால் பிரயாணம்போவார். எ-று. 34

18/068

வெள்ளி வடக்குசொல்லும் பலன்.

வடக்குசந்திரனிருப்பான் வறையும்சொல்விசாரமாகும்
நடுக்கமேதீவிற்சொன்னால் நலமில்லாகேள்விகாணும்
அடுக்கவேயீசானியத்தில் சூரியனால்பகைவர்பூசல்
கெடுக்குமேதீவிற்சொன்னால் கிட்டியபகையுண்டாமே.

இ-ள். வெள்ளிக்கிழமை வடக்கேசொல்லுமாகில் சந்திரனிருப்பான் விசாரம்வரும் தீவுதிசையிற்சொன்னால் பொல்லாங்குவரும் யீசானிய மூலையிற்சொன்னால் பகைவர் பூசலுண்டு தீவுதிசையிற்சொன்னால் பகைவரும். எ-று. 35

வெள்ளி ஆகாயம் பூமியிற்சொல்லும் பலன்.

தருவென ஆகாயத்தில் தான்சொல்சுக்கிரனாலே
பெருகுவாய்வெகுமானங்கள் பூரிப்பாய்உலகமீதும்
கருமமேபூமிமீதிற் கழறிடச்சனியினாலே
வருகுமேசாவுவார்த்தை வந்திடுமென்றார் முன்னோர்.

இ-ள். வெள்ளிக்கிழமை தலைக்குமேற்சொல்லுமாகிற் சுக்கிரனிருப்பான் வெகுமாணம் பூயியிற்சொன்னால் சனியிருப்பான் சாவுவார்த்தைவரும். எ-று. 36

சனிக்கிழமைசொல்லும் கெவுளி ஜாதி.

பஞ்சமஜாதிராசன் பகரக்கேள்நிறங்கறுப்பாம்
வஞ்சியரோடுபசியால் வாடியேயிருப்பாரென்று
பஞ்சவர்தம்பிசொன்ன பக்குவப்படியேயின்று
செஞ்சிவகாம்பரமென்னும் சிறுவனும்வெளியிட்டானே.

இ-ள். சனிக்கிழமைசொல்லுங் கெவுளி ஜாதிபஞ்சமசாதி அரசன் கறுப்பு நிறமாகும் ஆகாரமில்லாமல் ஸ்திரீயுந்தானும் யிளப்பாயிருப்பார்கள். எ-று. 37

சனிக்கிழக்கு சொல்லும்பலன்.

கிழக்கினில்ராகிருப்பான் கழர்வதுதுக்கமாகும்
பக்கமேதீவிற்சொன்னால் படுகுவாய்ராஜதுக்கம்

வழுங்கவே அக்கினிமூலை சந்திரனாற்சமதுக்கம்
விழித்திட தீவிற்சொன்னால் விஷத்தினாற்கேடுயென்றார்.

இ-ள். சனிக்கிழமை கிழக்கேசொல்லுமாகில் ராகுயிருப்பான் துக்கமாகுந் தீவுதிசையில்ராசதுக்கம் அக்கினி மூலையிற்சொன்னால் சந்திரனிருப்பான் சமதுக்கத் தீவுதிசையிற் சொன்னால் விஷவார்த்தை. 38

சனிதெற்கு சொல்லும் பலன்.

சுக்கிரனிருப்பான்தெற்கே ராஜபந்தனங்களாகும்
மிக்கவேதீவிற்சொன்னாற் பகருவாய் அபஜெயங்கள்
சிக்கெனநிருதிமூலை அங்காரகனால்சொக்கம்வரும்
பக்கமேதீவிற்சொன்னால் பகருவாய்அபஜெயங்கள்.

இ-ள். சனிக்கிழமைதெற்கு சொல்லுமாகிற் சுக்கிர னிருப்பான் ராஜபந்தனம் தீவுதிசையிற்சொல்லுமாகில் காய்ப்பழம்வரும் நிருதி மூலையிற்சொல்லுமாகில் அங்காரகனிருப்பான் சொக்கம்வரும் தீவுதிசையிற்சொன்னால் அபஜெயம்வரும் எ-று. 39

சனிமேற்கு சொல்லும்பலன்.

விளம்புசொல்மேற்கேயானால் வியாழனால்மஸ்திரமுண்டு
நலம்பெறதீவிற்சொன்னால் நாடுமேபுதியவார்த்தை
வளம்பெறவாய்வுமூலை யிந்திரனால்கோடிவஸ்திரம்
பலம்பெறதீவிற்சொன்னால் பந்துக்கள்வருகுவாரே.

இ-ள். சனிக்கிழமைமேற்கே சொல்லுமாகில் வியாழனிருப்பான் புதுவஸ்திரம்வரும தீவுதிசையிற்சொன்னால் புதியசங்கதிவரும் வாய்வுமூலையிற்சொன்னால் இந்திரனிருப்பான் கோடிவஸ்திரம்வரும் தீவுதிசையிற்சொன்னால் பந்துக்கள் வருகுவார்கள். எ-று. 40

சனிவடக்கு சொல்லும் பலன்.

கண்டுசொல்வடக்கேசொன்னாற்கேதுவால்கேடுவார்த்தை
விண்டிடுந்தீவிற்சொன்னால் சண்டையிட்டோடுவார்கள்
கண்டதுயீசானியத்திற் சனியினாற்கோபநோயாம்
துண்டமேதீவிற்சொன்னால் தூண்டுமேஅயலிற்சண்டை.

இ-ள். சனிக்கிழமை வடக்குசொல்லுமாகிற் கேதுயிருப்பான் கேடுவார்த்தை தீவுதிசையிற்சொல்லுமாகில் சண்டைபோட்டு ஓடிப்போவார்கள் யீசானியத்திற் சொன்னால் அயல்வீட்டுச் சண்டை.

சனி ஆகாயத்திலும்பூமியிலும் சொல்லும் பலன்.

சூரியன்யிருப்பான்மேலே சொல்வதுகாரியமாகா
கூரியபூமியிற்சொன்னாற் குணப்படும்புதனாலென்றார்
தாரினிற்புகழும்வாணர் தாளிணைபணிந்துயானும்
கூறினேன்ஏகாம்பரம் குற்றமும் பொருப்பீரையா.

இ-ள். சனிக்கிழமை ஆகாயத்திற்சொல்லுமாகிற் சூரியனிருப்பான் நினைத்த காரியமாகாது பூமியில் புதனிருப்பான் ஜெயமாகும் இந்த

னூலே இதுவரைக்கும்மறைவாயிருந்ததை அனேவோருக்கும் கப்படவேண்டுமென்று வேளாள வம்சத்திலுதித்த செஞ்சி ஏகாம் பரம் வெளியிட்டானே. எ-று. 42

பதினாறுதிக்கிற்கும் பல்லிகாதல்.

விருத்தம்.

பல்லிநூல் தானறியும் பரிட்சைகேளு
  பாலகனே சொல்லுவதை மறவாதெண்ணு
நல்லதென்றே யறைந்தமொழி கணத்தைக்கைக்கண்டு
  நலமானபாட்டதனைத் தேடிப்பார்த்து
சொல்லுவாய் நன்மைதுன்மைசூட்சமாக
  சுத்தமுள்ளபதினாறு திக்குங்கண்டு
வல்லவனென் யென்றுவீண் வாயாடாதே
  வண்மையுள்ளயிம்மருமம் ஆராய்ந்துபாரே.

இ-ள். பல்லியானது சொல்லும்பலன் அறிவது எவ்விதமென்றால் அதுபேசும்போது கவனமாகக்கேட்டு அப்போது எத்தனைமொழியுதோ அத்தனையுமகவனமாகவெண்ணி அவரவர்களே நினைத்தகாரியம் திருப்தியாகக் காணலாம். எ-று. 1

பாரப்பாரெண்டேகால் பகருமாகில்
  பழியென்றசாவுடனே துன்பமுண்டாம்
கூரிடவே மூன்றுசொல் கேட்பாயாகில்
  குற்றமில்லே போனவர்கள் வருவாரப்பா
சீரிடவே நான்குசொல் கேட்பாயாகில்
  சிந்தனையாம் பந்துக்கள் சொந்தச்சாவாம்
வீரிடவே ஐந்தாகில் வருகுஞ்சண்டை
  விளம்புமொரு ஆறாகில் உறவேகூடும்.

இ-ள். இரண்டுசொல் சொல்லுமாகிற் சாவுவார்த்தைமூன்றுசொல்லாகில் பந்துக்கள்வருத்து நாலுசொல்லாகில் சொந்தசாவு ஐந்துசொல்லாகில் சண்டைவரும் ஆறுசொல்லாகில் புதியவுறவு கூடும். 2

யென்னசொல்வேன் யேழுமொழிபுகலுமாகில்
  இயம்பவொண்ணு துன்பமுடன் வியாதிகாணும்
பின்னுமே தனித்தழுது வருவாரப்பா
  பேசப்பா அம்மொழிக்கேடிழையுமுண்டு
நன்மையுடன் யெட்டேசொற் கேட்பாயாகில்
  நல்ல சுபசந்தனம்பூ கொண்டேகேளும்
தன்மையுடன் மனக்கூட்டி வருவாருங்கள்
  தகுதியுள்ளபந்துவென்று அறிந்துக்கொள்ளே.

## கெவுளி சாஸ்திரம்.

... ஏழுசொல்சொல்லுமாகில் துன்பம் வியாதிதலே விரித்து அழுதுவருவார்கள் யின்னம் மழையுமுண்டு எட்டுசொல்சொல்லுமாகிற் சந்தனப்பூ தாம் பூலமுடன் கொண்டு நல்ல சுப காரியத்திற்கு சொந்த பந்துக்கள் வருகுவார். எ-று. 3

சுத்தமுடன் வொன்பதுதான் சொல்லுமாகிற்
  சுகம்பெருவாய் மகிழ்ச்சியுடன் வுலகமீது
பத்தேசொற் கேட்கபெருந் துக்கம்நேரும்
  பகையென்ற கலகமதின் கூடவுண்டாம்
சித்தமுடன் பதிளென்று சரியாய்கேட்கிற
  செய்பவரும்யாத்திரைகள் சிறப்பாய்தானே
மெத்தெனவே பனிரெண்டு மகிழ்ந்துசொல்ல
  மணமென்றே கலியாணம் கூடும்பாரே.

இ-ள். ஒன்பதுசொல் சொல்லுமாகில் மகிழ்ச்சியுண்டு பத்துசொல்லாகிற் சண்டையோடு துக்கம்வரும் பதிளென்றாகில் யாத்திரைசெய்யவரும் பனிரெண்டாகில் கலியாணம் கூடும். எ-று. 4

பதின்மூன்றுவுன் செவியில் கேட்பாயாகில்
  பரிந்துவரும் காணிக்கை யுன்னைத்தேடி
விதிவசமே பதினாலும் சொல்லுமாகில்
  வருகுமப்பா யிழவோலே தவறிடாமல்
கதியாக பதினஞ்சி தானுரைத்தால்
  தப்பாமல் வுறவின்முறை வருவாரப்பா
கதிபெறவே யோகமுண்டாம் பதினாறுக்கு
  கண்மணியே சொன்னபடி கண்டுதேறே.

இ-ள். பதின் மூன்றுசொல்லாகிற் பொருள்வரும் பதினாலுசொல்லாகிற் சாவுவோலேவரும் பதினஞ்சாகில் உறவின்முறையார் வருத்து பதினாறுமாகில் நல்லயோகமுண்டாம். எ-று. 5

## பல்லில் விழும் பலன்.

### விருத்தம்.

பல்லியது சிரசின்மேல் விழுகுமாகில்
  பகையென்ற கலகமது வருகுமப்பா
நல்லதப்பா முகமீதில் விழுகுமாகில்
  நம்படா சந்துதரி சனமேயென்ற
சொல்லப்பா புருவத்தில் விழுகுமாகில்
  சுகமாகும் அரசருட வுதவியாலே
தொல்லையப்பா மேலுதட்டில் விழுகுமாகில்
  தோற்றிடுவாய் கைப்பொருளுன் தோஷத்தாலோ.

## கெவுளி சாஸ்திரம். 1

சிழுதட்டில் விழுந்திட்டால் உடனேலாபம்
கெடுதியப்பா மூக்கில்விழ வியாதிகாணும்
தாழ்வன்றி வலதுசெவி மேல்விழுந்தால்
தம்பியடா தீர்க்காயு சாகவாழ்வாய்
வாழ்வையடா யிடதுசெவி மேல்விழுந்தால்
வர்த்தகத்தில் தனலாபம் கொண்டுநாளும்
கேழ்க்கவே சோல்லுவேன்கேள் விழியிலாகில்
கெடுதியென்ற கிரகத்தால் பயமதாமே. 2

முகக்கடை மீதிலே விழுகுமாகில்
மூளுமப்பா அரசால் தெண்டனைகள்
பகருமொரு வாய்மீதில் விழுகுமாகில்
பாலகனே மனதில்மெத்த பயமதாகும்
தகமையுள்ள கண்டத்தில் விழுகுமாகில்
தனையெதிர்த்த சத்துருக்கள் நாசமாவார்
சுகமெனவே வந்துபுஜம் மேல்விழுந்தால்
சொர்க்கமென்று ஆரோக்கியம்வருகும்பாரே. 3

இடதுபுஜ மீதிலே விழுகுமாகில்
எப்படியும் போகமது செய்வாயப்பா
வடிவான வலதுமணி கட்டில் வீழ்ந்தால்
வாகாது அதுகெட்ட பீடையப்பா
திடமான யிடதுமணிக் கட்டில்வீழ்ந்தால்
தரணியிலே கீர்த்தியது கொள்வாயப்பா
படுமெனவே ஸ்தனங்களிலே விழுகுமாகில்
பாபசம் பவமென்று பகுந்திட்டாரே. 4

வயிற்றின்மேல் தான்வந்து விழுகுமாகில்
வருகுமப்பா தானியங்கள் உனக்குலாபம்
நயம்பெறவே மாரின்மேல் விழுகுமாகில்
நாட்டப்பா தனலாபம் நம்பிப்பாரு
ஜெயம்பெறவே தொப்புளிலே விழுகுமாகில்
ஜெனிக்குமப்பா ரத்தினலாபம்தானும்
தயவன்றி முழங்காலுக் கதிரசுகம்
தடையன்றி பாதத்தில் பிரயாணமாமே. 5

கெவுளி சாஸ்திரம்.

முற்றிற்று.

## ஆந்தைசீரல் அறியும்பலன்.

### விருத்தம்.

ஆந்தையது ஒரு சீரல் சீறுமாகில்
அவ்வியமே மரணமொழி யாகுமப்பா
சிந்தையது களித்திடுவாய் ரெண்டேசீரல்
சீக்கிரமே நினைத்தபொருள் வந்துகூடும்
விந்தையுடன் சீறல்தான் மூன்றேயாகில்
வஞ்சியரை யெப்பவும் புணர்வாயப்பா
பந்தமுடனே நாலுசீரல் கேட்கிற
பகையென்ற கலகமப்பா வந்தே தீரும்.

இ-ள். ஆந்தையானது ஒரு சீறற் சீறுமாகில் சாவுவார்த்தை ரெண்டு சீரலாகில் நினைத்தகாரியம்முடியும் மூன்று சீரலாகில்கன்னியை புணர்வாய் நாலு சீறலாகில் உடனே கலகமாகும்.

சீறியது ஐந்தாகில் சொல்லக்கேளும்
சிக்குமடா அங்கேயொரு பிரயாணந்தான்
கூறியது ஆறொன்று குறித்துக்கேட்கில்
குற்றமில்லை யடுத்தவர்கள் வருவாரப்பா
மீறிடவே சீறிலறி வேழேயாகில்
மிக்கவே யிருக்குஞ் சம்பத்தே நீக்கும்
வீரியமா யெட்டுறையில் சாவுசொல்லும்
விளம்பிடுவாய் ஒன்பதுடன் பத்தாம்நன்மை.

இ-ள். ஐந்து சீறற் சீறுமாகிற் பிரயாணங் கூடும் ஆறு சீர லாகில் பந்துக்கள்வரவு ஏழு சீறலாகிற் சம்பத்துண்டாதும் எட்டு சீற லாகில் உடனே சாவுசொல்லும் ஒன்பது சீறலாகில் உடனே நன்மையுண்டு பத்து சீறலாகில் மென்மேலும் நன்மையுண்டாம்.

## ஆந்தைசீரல் அறியும்பலன்.

முற்றுப்பெற்றது.

(3)1068